DINAMALAR
National Tamil Daily

# போலி தென்னங்கன்று விற்பனை: கேரள வியாபாரிகள் சிறைபிடிப்பு

Added : ஏப் 11, 2021 01:15

பல்லடம்:பல்லடம் அருகே, போலி தென்னங்கன்று விற்ற, கேரள வியாபாரிகளை, விவசாயிகள் சிறைபிடித்தனர்.திருப்பூர் மாவட்டம், பல்லடம் வெங்கிட்டாபுரம் பகுதியில், ஒரு தனியார் நிறுவனம், அங்கீகாரம் பெற்று தென்னங்கன்றுகளை விற்று வருகிறது. இந்நிறுவன பெயரில், போலி தென்னங்கன்றுகளை சிலர் விற்றுவருவதாக புகார் எழுந்தது.இந்நிலையில், கேரள வியாபாரிகள் சிலர்,செஞ்சேரிப்புத்துார் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஒருவரிடம் போலி தென்னங்கன்றுகளை விற்றுள்ளனர். விவசாயிகள் சேர்ந்து, வியாபாரிகளை சிறைபிடித்து, விதை ஆய்வு துணை இயக்குனருக்கு தகவல் தெரிவித்தனர். அங்கு வந்த அதிகாரிகள், கேரள வியாபாரிகளை எச்சரித்து அனுப்பினர்.கோவை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் வெங்கடாசலம் கூறுகையில், "அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் நாற்று பண்ணைகள் வாயிலாக, பல தென்னை ரகங்கள் விற்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட பண்ணைகளில் ஆய்வு செய்யப்பட்ட பிறகு, நாற்றுகள் விற்பனைக்கு அனுமதிக்கப்படுகின்றன. விவசாயிகள் உரிமம் பெற்ற, பண்ணைகளில் மட்டும் தென்னங்கன்று வாங்கவேண்டும்," என்றார்.

Source: https://www.dinamalar.com/news_detail.asp?id=2747616